

வாழ்க்கை நம் கதவுகளைத் தட்டிக் கொண்டே இருக்கிறது. வெளியில் பார்ப்பதற்கு அஞ்சி நாம் நம் கதவுகளை மூடும் போது, தட்டும் ஓசை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.


வசந்த இதழ்
Vasanta Ethal
KRISHNAMURTI FOUNDATION INDIA OCTOBER 2008 - JANUARY 2009 Rs.2/- VOL. IV ISSUE 1


# கலையும், 'நான்' அற்ற நிலையும்

*The Urgency of Change* என்ற புத்தகத்திலிருந்து ஒரு பகுதி

நண்பர்: கலைஞர் என்பவர் யார் என்று வியக்கிறேன். கங்கை நதிக்கரையோரம், இருட்டான சிறிய அறை ஒன்றில், பட்டு இழையையும், பொன் இழையையும் கொண்டு மிகவும் அழகான புடவையை ஒருவர் நெய்து கொண்டிருக்கிறார். பாரீஸ் நகரில் தனக்கு அது புகழை ஈட்டித் தரும் என்ற நம்பிக்கையோடு ஒருவர் ஓவியத்திற்கு வண்ணம் தீட்டிக் கொண்டிருக்கிறார். ஆண் பெண் தொடர்பில் காலங்காலமாய் இருக்கும் பிரச்சனைகளை மையமாக வைத்துக் கொண்டு கதைகள் பலவற்றை புனைந்து கொண்டு ஒருவர் இருக்கிறார். பரிசோதனைக் கூடத்தில், விஞ்ஞானி ஒருவர் ஆராய்ச்சி செய்கிறார். சந்திரனுக்கு ராக்கெட் அனுப்புவதற்காக, ராக்கெட்டின் கோடிக்கணக்கான பாகங்களை சரிவரப் பொருத்தி வடிவமைக்கிறார் தொழில் நுட்பக் கலைஞர். இந்தியாவில், இசைக் கலைஞர் தனது இசையின் வடித்தெடுக்கப்பட்ட அழகு, அப்பழுக்கு இல்லாமல் கேட்பவரிடம் சென்றடைய, தன் வாழ்க்கையை மிகுந்த தன்னொழுக்கத்துடனும் எளிமையுடனும் நடத்துகிறார். இல்லத்தரசி ஒருவர் உணவு வகைகளைத் தயார் செய்து கொண்டிருக்கிறார். புலவர் ஒருவர் வனப் பகுதியில் தனியாக நடந்து கொண்டிருக்கிறார். இவர்கள் எல்லோருமே அவரவர் பாணியில் கலைஞர்கள் தானே? எல்லோர் கரங்களிலும் அழகு இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால், தங்களிடத்தும் அழகிருப்பது, அவர்களுக்குத் தெரிவதில்லை. நேர்த்தியான ஆடை தயாரிப்பவரும், சிறப்பான காலணிகளைச் செய்பவரும், உங்கள் மேசையின் மேல் இருக்கும் அழகான அலங்காரத்தைச் செய்த பெண்மணியும் அழகைக் கொண்டு செயலாற்றுவதாகவே தோன்றுகிறது. ஓவியர், சிற்பி, இசையமைப்பாளர், எழுத்தாளர் ஆகியோர் மட்டும் படைப்பாற்றல் திறன் கொண்ட கலைஞர்களாக மிக உயர்ந்த மதிப்போடு உலகில் போற்றப்படுவது ஏன் என்று நான் அதிசயப்படுவதுண்டு. காலணிகளைச் செய்பவரோ, சமையல் செய்பவரோ, கலைஞராக ஏன் மதிக்கப்படுவதில்லை? அவர்களிடமும் படைப்பாற்றல் இருக்கிறதல்லவா? அழகின் பல்வகையான வெளிப்பாடுகளையும் நீங்கள் கருத்தில் கொள்ளும்போது வாழ்வில், உண்மையான கலைஞனின் இடம் என்ன, மற்றும் உண்மையான கலைஞன் யார்? அனைத்து உயிர்களின் சாராம்சமே அழகுதான் என்று சொல்லப்படுகிறது. மிகவும் அழகானது என்று கருதப்படும் நம் எதிரே இருக்கும் கட்டிடம் வாழ்வின் சாராம்சமாக இருக்கும் அழகின் வெளிப்பாடா? அழகு மற்றும் கலைஞர் என்ற இந்த விஷயத்தை முழுமையாக நீங்கள் விளக்கினால், நான் மிகவும் நன்றி பாராட்டுவேன்.

***கிருஷ்ணமூர்த்தி :*** செயலில் மிகுந்த திறமையுடையவர் கலைஞர் என்பது உறுதியாகத் தெரிகிறது. செயல், வாழ்க்கைக்கானச் செயலேயன்றி

☞ 2

# அச்சத்தில் நடுங்கும் மனிதர்கள்

சம்பிரதாயம், சமுதாயம், சமயப்பிரசாரங்கள், மற்ற பிற பிரசாரங்கள் ஆகியவற்றின் விளைவாக நீங்கள் இருக்கிறீர்கள். மற்றவர்கள் சொன்னதையே நீங்கள் திரும்பச் சொல்கிறீர்கள். உங்கள் கல்வி முறையும் அவ்வாறே உள்ளது. நீங்கள் தளைபடுத்தப்பட்டவர்கள்; நீங்கள் சுதந்திரமாகவோ, மகிழ்ச்சியாகவோ இல்லை. ஜீவனற்று, உத்வேகமற்று அச்சத்தில் நடுங்கும் மானுடர் நீங்கள். அதிகாரபூர்வமான கோட்பாடுகளாலோ அல்லது உங்களின் குறிப்பிட்ட விஷய ஞானத்தாலோ நீங்கள் நிரப்பப்பட்டுள்ளீர்கள்.நீங்கள் பிறர் மூலம் அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் அறிய முற்படும் இரண்டாம் தர மனிதர்கள்.

Talk in San Diego, 7 April 1970 ■

வாழ்க்கைக்கு வெளியே நடப்பதானச் செயல் அன்று. ஆகவே திறனுடன் வாழ்வது ஒருவரை உண்மையான கலைஞனாக்குகிறது. ஒரு நாள் பொழுதில், ஒரு சில மணி நேரத்திற்கு திறனோடு செய லாற்றலாம். இசைக்கருவி ஒன்றை மீட்டி இனிய நாதம் எழுப்பலாம், கவிதைகள் எழுதலாம், ஓவியம் தீட்டலாம் அல்லது இவைகளுக் கெல்லாம் மேலே உயர்ந்து, மறுமலர்ச்சி இயக்க காலத்தில் (கி.பி. 14ம் நூற்றாண்டு - கி.பி. 16 நூற்றாண்டு) பல்வேறு வகைப்பட்ட ஊடகங்களில் பணியாற்றிய பெரும் கலைஞர்களைப் போல, ஒன்றிற்கும் மேற்பட்ட துறைகளில் செயலாற்ற லாம். ஆனால், சில மணி நேர இசை அல்லது கவிதை எழுதுதல் என்றிருந்து விட்டு எஞ்சியிருக்கும் நேரத்திற்கு பலவற்றுடன் முரண் பட்டு இருக்கலாம்; எஞ்சியிருக்கும் நேரத்தில் அவர் வாழ்க்கை குழப்பத்திலும், ஒழுங்கீனத்திலும் செலவாகலாம். அப்படிப்பட்டவர் கலைஞரா? வயலின் இசைக்கருவி யை மிகுந்த கலைநயத்துடன் வாசிக்கும் கலைஞர் தனக்குக் கிடைக்கும் புகழ், பெயர், பெருமை இவற்றில் குறியாக இருப்பின், அவருக்கு வயலினில் ஆர்வம் இல்லை. அதில் கிடைக்கும் புகழுக்காக அதைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார். இசை யை விட 'நான்' என்பது அவருக்கு மிகுந்த முக்கியத்துவம் பெற்றதாய் இருக்கிறது. அவ்வாறாகவே புகழில் குறியாய் இருக்கும் எழுத்தாளருக்கும் ஓவியருக்கும் கூட 'நான்' மிகுந்த முக்கியத்துவம் பெற்று விடுகிறது. அவர் மிகவும் இனிமையான இசையாகக் கருதும் ஒன்றுடன் 'நான்' என்பதை அடையாளப்படுத்திக் கொள்கிறார். மத நம்பிக்கையுடைய வர் தான் மாட்சிமை பொருந்தியதாக கருதும் ஒன்றில் அவருடைய 'நான்' என்பதை அடையாளப்படுத்திக் கொள்கிறார். அவர்களுடைய குறிப் பிட்ட சிறிய துறைகளில், அவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். ஆனால் விரிந்து பரந்த வாழ்க்கை யெனும் பரப்பில் எஞ்சியிருக்கும் பகுதிகளை உதாசீனப்படுத்து கிறார்கள். ஆகவே செயல்பாட்டில் திறமை என்றால் என்ன என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஓவியம் தீட்டுவதில் திறமை, தொழில் நுட்பத் திறமை, எழுதுவதில் திறமை என்று மட்டுமில்லாமல், திறனுடனும் அழகுடனும் வாழ்வு முழுவதையுமே எப்படி வாழ்வது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். திறமை யும், அழகும் ஒத்திருப்பவையா? கலைஞரோ அல்லது மற்றவரோ தனது வாழ்க்கை முழுவதையும் திறமையுடனும் அழகுடனும் நடத்திச் செல்ல முடியுமா? வாழ்வது என்பது செயல். துன்பத்தை வர வழைப்பதாக அச்செயல் இருக்குமே யானால், அது திறமையான செயல் இல்லை என்றாகிறது. துன்பம், எதிர்ப்பு, பொறாமை, பேராசை, போராட்டம் போன்றவை இல்லாத வாழ்க்கையை ஒரு மனிதனால் வாழ முடியுமா? யார் கலைஞர், யார் கலைஞர் இல்லை என்பதில்லை பிரச்சனை; உண்மையைத் திரித்துக் கூறாமல், சித்திரவதை செய்யாமல் வாழ, மனிதனால் முடியுமா என்பதே பிரச்சனை. உயர்ந்த இனிய இசையையும், கலை நுட்பம் நிறைந்த சிற்பங்களையும், நயமிக்க கவிதை களையும், நடனத்தையும் சிறுமைப் படுத்துவதோ ஏளனம் செய்வதோ அக்கலைகளை அவமதித்தலாகும்; அப்படி அவமதிப்பது திறமையற்ற முறையில் வாழ்வதாகும். செயலில் திறமையாய் மிளிரும் கலை நயமும் அழகும் நாள் முழுவதும் செயல் படவேண்டுமே தவிர, ஒரு நாளில் சில மணி நேரத்திற்கே மிளிர்வதாக

# *நான் எனது எண்ணங்களிலிருந்து வேறுபட்டவனா?*

நான் எவ்வாறு தீய எண்ணங்களி லிருந்து, கட்டுக் கடங்காது அலை பாய்கிற, தன்னிச்சையாக திரிகிற எண்ணங்களிலிருந்து விடுபட்டு இருக்க முடியும்? தீய மற்றும் கட்டுக்கடங்காத எண்ணங்களுக்கு அப்பால் எண்ணுபவர் என்பவர் இருக்கிறாரா? தயவு செய்து உங்கள் மனதை கவனியுங்கள்.

'நான்', சுயம் என்று ஒன்று தனித்திருந்து 'இது கட்டுக்கடங்காத எண்ணம்', 'இது தீயது', 'நான் இதைக் கட்டுப்படுத்த வேண்டும்', 'நான் இந்த எண்ணத்தை இருத்திக் கொள்ள வேண்டும்', என்று கூறிக் கொண்டிருக்கிறது. இதுதான் நமக்குத் தெரியும். ஆனால் இந்த 'நான்', 'எண்ணுபவர்', 'கணிப்பவர்', 'கத்தரிப்பவர்' அந்த எண்ணங்களிலி ருந்து வேறுபட்டவரா? இந்த 'நான்', எண்ணம், பொறாமை, தீய குணம் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டதா? தீமைக் குணத்திலிருந்து வேறுபட்ட வன் என்று எண்ணிக் கொண்டிருக் கும் 'நான்' எப்போதும் என்னைத் தாண்டிச் செல்ல எண்ணுகிறது. என்னை தள்ளிவிட முயற்சிக்கிறது. வேறு ஏதோ ஒன்றாக ஆக விரும்பு கிறது. எண்ணங்களைத் தள்ளி வைத்து விட வேண்டியும், அவை திரியாமலும் இருக்க வேண்டியும் உங்களுக்குள் எப்போதும் போராட்டம் இருந்து கொண்டே இருக்கிறது.

நாம் இந்த எண்ணுகிற, சிந்திக்கின்ற இயக்கத்தில் முயற்சி என்ற போராட்டத்தை உருவாக்குகிறோம். இதை நீங்கள் கவனிக்கிறீர்களா? பின்பு நீங்கள் எண்ணங்களை அடக்க வேண்டி ஒரு ஒழுக்கத்தை ஏற்படுத்துகிறீர்கள். 'நான்', தீய எண்ணங்களை கட்டுப்படுத்த வேண்டும், 'நான்' பொறாமை அற்றவனாக ஆக வேண்டும், 'நான்' வன்முறையின்றி இருக்க வேண்டும். இப்படியோ, அல்லது அப்படியோ இருக்க வேண்டும் என்று ஒரு ஒழுக்கத்தை கடைபிடிக்க முனை கிறோம். இத்தகைய இயக்கத்தி லேயே நாம் ஒரு முயற்சியை உருவாக்குகிறோம்; அத்தகைய முயற்சியில் 'நான்' என்று ஒன்றும், அந்த 'நான்' கட்டுப்படுத்த வேண்டிய மற்றொன்றும் இருக் கிறது. இந்த போராட்டம் தான் நம் அன்றாட வாழ்வின் நிஜம்.

பிப்ரவரி 28, *புக் ஆப் லைப்* என்ற புத்தகத்திலிருந்து ■

இருக்கக் கூடாது. பியானோவை இனிமையாக வாசித்தால் மட்டும் போதாது, நாள் முழுவதற்கும் கலை நயமும் அழகும் இருக்க வேண்டும். இது தான் உண்மையில் சவாலாக இருக்கிறது. இசைக் கருவியை நீங்கள் தொடும் விதத்திலேயே, நீங்கள் இனிமையான இசையை எழுப்ப வேண்டும். ஆனால் அது மட்டும் போதாது, அது பரந்த வயலில் சிறிய மூலையில் மட்டும் விவசாயம் செய்வதற்கு ஒப்பாகும். நமது அக்கறை மொத்த வயலிலும் இருக்க வேண்டும். வாழ்க்கை தான் அந்த வயல். நாம் எப்பொழுதுமே வயல் முழுமையிலும் கவனம் செலுத்தாமல் அதை உதாசீனப் படுத்தி விட்டு, நம்முடையதாகவோ அல்லது பிறருடையதாகவோ இருக்கும் நிலத்தின் சிறிய பகுதியில் கவனம் முழுவதையும் செலுத்து கிறோம். கலை நயம் முழுமையான விழிப்புடன் இருக்க வேண்டும். அப்படியிருப்பதனால், வாழ்நாள் பூராவும் திறமையோடு செயல்பட முடியும். அதுவே அழகு.

***நண்பர்:*** நீங்கள் சொல்வதின்படி தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி மற்றும் அலுவலகத்தில் வேலை செய்பவர் ஆகியோரைப் பற்றி என்ன சொல்வது? அவர்களுக் கான வேலையில் திறமைக்கு இடம் ஏதுமில்லை. அவ்விதமாக வேலை அவர்களை வேறு எந்த திறமை யையும் பெற விடாமல் மரத்துப் போகச் செய்யவில்லையா? அவர் செய்யும் வேலை அவரைத் தளைப் படுத்தவில்லையா?

***கிருஷ்ணமூர்த்தி:*** மிகவும் சரி. அவரைத் தளைப்படுத்துகிறது. ஆனால், அவர் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, விழித்துக் கொள் வாரேயானால், ஒன்று அவர் வேலை யை விட்டு விலகுவார் அல்லது அவ்வேலையை மாற்றி யமைத்து கலைநயம் மிக்கதாக்கி கொள்வார். எது முக்கியம் என்றால், வேலை முக்கியம் அல்ல. வேலைக் கான விழிப்புணர்வு தான் முக்கியம். எது இன்றியமையாதது என்றால் வேலை தளைபடுத்துகிறது என்ற விழித்தெழு தல் தானேயன்றி தளைபடுதல் அல்ல.



***நண்பர்:*** விழித்தெழுதல் என்று நீங்கள் சொல்வதின் பொருள் என்ன?

***கிருஷ்ணமூர்த்தி:*** சந்தர்ப்பங்கள், சவால்கள், பேரிடர் அல்லது மகிழ்ச்சி ஆகியவைகளால் மட்டும் தான் நீங்கள் விழித்தெழுகிறீர்களா, அல்லது காரணம் என்று எதுவுமில் லாமல், விழித்தெழச் செய்யும் நிலையாக ஏதாவது இருக்கிறதா? ஒரு நிகழ்ச்சியாலோ, ஒரு காரணத்தாலோ விழித்தெழுவதாக இருக்கும்போது, நீங்கள் அக்காரணத்தை நம்பி, அதைச் சார்ந்து இருக்கிறீர்கள். நீங்கள் சார்ந்திருப்பது எதுவாக இருப்பினும் போதை மருந்தோ, உடலுறவோ, ஓவியமோ, இசையோ எதுவாக இருப் பினும், சார்ந்திருப்பவை உங்களை உறக்கத்தில் ஆழ்த்தி விடுவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்கள். ஆகவே சார்ந்திருத்தல், திறமைக்கும் கலை நயத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கிறது.

***நண்பர்:*** காரணத்தினால் தோன்றாத விழிப்புணர்வு நிலை என்பது என்ன? காரணமும் இல்லாத, காரணத்தின் விளைவும் இல்லாத நிலைப்பாடு ஒன்றைப் பற்றி நீங்கள் கூறினீர்கள். காரணம் ஏதோவொன்றின் விளை வாக இல்லாத நிலைப்பாட்டை மனம் கொண்டிருக்க முடியுமா? என்னால் இதைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. நம் எண்ணங்கள் அனைத்தும் நம் இயல்பும், காரணம் ஒன்றின் பலனாகத் தானே இருக்கின்றன? காரண காரியம் என்ற சங்கிலித் தொடர் முடிவில்லாமல் தொடர்கிறது.

***கிருஷ்ணமூர்த்தி:*** காரண காரியச் சங்கிலித்தொடர் முடிவற்றது. ஏனென் றால், காரியம் காரணமாகிறது. காரணம் மேலும் காரியங்களைத் தோற்றுவிக்கிறது - இப்படியாக நீடிக்கிறது.

***நண்பர்:*** காரண காரியச் சங்கிலி யைத் தாண்டி, அதற்கப்பாற்பட்ட செயல் என்று என்ன இருக்கிறது?

***கிருஷ்ணமூர்த்தி:*** காரணத்தோடு கூடிய செயல், உள்நோக்கத்தோடு கூடிய செயல் மற்றும் ஒன்றின் விளை வாகப் பிறந்த செயல் என்பவைகள் தாம் நமக்குத் தெரிந்தவை. செயல்கள் அனைத்துமே உறவு முறையில் செயல்படுபவை. ஒரு காரணத்தினால் உண்டான உறவு முறை என்றால், அது நிலைமைக்குத் தக்கபடி தன்னை மாற்றிக் கொண்ட கபட உறவு முறை என்றாகிறது. இக் காரணத்தினால் அத்தகைய உறவு முறை உயிர்ப்பு இல்லாத மந்த கதிக்கு செல்வது தவிர்க்க முடியாததாகிறது. அன்பு ஒன்று மட்டும்தான் காரணம் எதையும் கொண்டிராதது, சுதந்திர மானது; அது அழகானது, அது திறமையானது. அதுவே கலை யாகும். அன்பு இல்லாதபோது, அங்கு கலையும் இல்லை. இசைக் கலைஞர் இனிய இசையை வழங்கும் போது 'நான்' என்ற உணர்வு இல்லாதிருப் பதே. ஆனால் வாழ்வின் முழுப்பரப் பையும் கவனத்தில் கொள்ளாமல், அதன் சிறு பகுதியில் ஒருமுகப்பட்டு செயலாற்றிக் கொண்டிருந்தால், அச்செயல்பாட்டில் ''நான்'' என்ற உணர்வு இல்லாமல் இருந்தாலும்,

நீங்கள் திறம்பட வாழவில்லை; அக் காரணத்தால், நீங்கள் வாழ்க்கைக் கலையறிந்த கலைஞர் இல்லை என்றாகிறது. ''நான்'' என்ற எண்ணம் வாழ்க்கையில் இல்லாதிருப்பதுவே அன்பும் அழகும் ஆகும். ''நான்'' என்ற எண்ணம் அற்ற நிலை, அதற்கே உரிய திறமையைக் கொணர்வதாய் உள்ளது. ''நான்'' என்ற எண்ணம் அற்ற நிலையில், அந்நிலை கொணர்ந்த திறமை யோடு, வாழ்வின் மொத்தப் பரப் பிலும், திறம்பட வாழ்வதே, மிகவும் உன்னதமான, கலைகளின் சிகரமான மேம்பட்ட கலையாகும்.

***நண்பர்:*** கடவுளே! இதை நான் எப்படிச் செய்வது? வாழ்க்கைக் கலையை என்னால் உணர முடி கிறது, காண முடிகிறது. ஆனால் எப்படி அதை என் வாழ்வில் நிலை நிறுத்துவது?

***கிருஷ்ணமூர்த்தி :*** அதை நிலை நிறுத்த வழிகள் ஏதுமில்லை, அதை போஷிக்க வழிகள் ஏதுமில்லை, அதைக் கடைபிடிப்பது என்று ஏது மில்லை; அதைப் ''பார்ப்பது'' மட்டும் தான் இருக்கிறது. 'பார்ப்பது' தான் எல்லா திறன்களிலும் மேம்பட்ட திறனாகும். ■

## இதயத்தைத் திறத்தல்

மற்றவருடைய பிரச்சனைகளைக் கேட்பதற்கு யார் அக்கறை கொண்டுள்ளார்? நமக்கு நம் பிரச்சனைகளே ஏராளமாக இருப்பதால் மற்றவர்கள் பிரச்சனை களைக் கேட்பதற்கு நமக்கேது நேரம்? மற்றவர் நம் பிரச்சனை களை கவனம் கொடுத்துக் கேட் பதற்கு நாம் பணத்தின் மூலமோ, ஜபத்தின் மூலமோ அல்லது நம்பிக்கையின் மூலமோ கைம் மாறு செய்ய வேண்டும். ஒரு நிபுணர் கவனம் அளிப்பார்; அது அவருடைய தொழில். ஆனால் அதில் நிரந்தர தீர்வு இல்லை. ஏன் இதைக் கூறினோம் என்று நம்மை யே நொந்து கொள்ளாமல், தடை யேதுமின்றி இயல்பாக நம் மனச் சுமைகளை நாம் இறக்க விரும்பு கிறோம். தவறை மன்னித்து, தூய்மைப்படுத்துவது செவி மடுப் பவரிடம் இல்லை; அது இதயத்தை திறக்க விழைபவனிடமே உள்ளது.

*Commentaries on Living* - Ch. 56 ■

# *நாம் வெறும் நினைவு மூட்டையே*

*On Living and Dying* என்ற புத்தகத்திலிருந்து

உண்மையில் மரணம் என்பது என்ன? முடிவுக்கு வருவது அல்லவா? உடல் முடிவுக்கு வரப் போகிறது. ஏனெனில் அது முதுமை அடைகிறது. அல்லது நோய், விபத்தாலும் ஏற்படலாம். வெகு சிலரே அழகாக முதுமையடை கிறோம். ஏனெனில், நாம் சித்திர வதைக்குள்ளான பிறவிகள். இதை நம்முடைய முகங்கள் நமக்கு வயதாகும் போது காட்டுகின்றன. அத்துடன் முதுமையின் துயரம் இருக்கிறது, கடந்த காலத்தின் பொருட்களை நினைவில் கொண்டு வருவதன் மூலமாக.

மனோவியலாகத் தெரிந்த எல்லா வற்றுக்கும் நாள்தோறும் ஒருவர் இறந்து போக முடியுமா? தெரிந்த வற்றிலிருந்து விடுதலை இல்லை யென்றால் எது 'சாத்தியமானதோ' அதைக் கைப்பற்ற முடியாது. சாதாரணமாக நம்மால் 'சாத்திய மானது' என்பது எப்போதும் தெரிந்ததன் களத்தில் தான் இருக்கிறது. ஆனால் சுதந்திரம் இருக்கும்போது அந்த 'சாத்திய மானது' என்பது பெருமளவில் இருக்கிறது. நாளை காலையில் புதிய மனிதராய் எழுந்திருக்கும் வண்ணம் மனோவியலாக ஒருவரின் கடந்த காலத்திற்கும், எல்லா பந்தங்க ளுக்கும், பயங்களுக்கும், சஞ்சலத் திற்கும், வீண் பெருமைக்கும், கர்வத்திற்கும் முற்றிலுமாக இறக்க முடியுமா? நீங்கள் சொல்வீர்கள் 'இதை எப்படிச் செய்வது, இதற்கு என்ன வழி?' அதற்கு வழி கிடையாது, ஏனெனில் வழி முறை என்பது நாளை என்பதை உள்ளடக்கியிருக்கிறது. அது நீங்கள் பயிற்சியின் மூலம் நாளைக்கு, பல நாளைகளுக்கு அப்பால் எதையோ அடையப் போகிறீர்கள் என்பதை உள்ளடக்கி யிருக்கிறது. இந்த உண்மையை உடனடியாக நீங்கள் பார்க்க முடியுமா? கருத்தாக அல்லாமல் உண்மையாகப் பார்க்க முடிகிறதா? மனம் புதிதாக, களங்கமற்று, இளமை யுடன், ஆற்றலுடன், உணர்ச்சி வேகத்துடன் இருக்க முடியுமா? மனோவியலாக கடந்த காலத்திற்கு முடிவு ஏற்படாதவரை? ஆனால் நாம் கடந்ததைப் போகுமாறு விட விரும்பவில்லை. ஏனெனில் நாம் தான் கடந்த காலம். நம் எண்ணங்கள் எல்லாமே கடந்ததை அடிப்படை யாகக் கொண்டது. எல்லா அறிவுச் சேர்க்கையும் கடந்த காலத்தது. ஆகவே, மனத்தால் போக விட முடியாது. விடுவதற்கு அது எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சியும் கடந்ததின் பகுதியே. கடந்தது வேறு ஒரு நிலையை அடையும் நம்பிக்கையில் செயல்படுவது.

மனம் அசாதாரணமான நிசப்தத் திற்கும், அமைதிக்கும் வர வேண்டும். பிரச்சனையின் முழு தன்மையையும் பார்க்கும் போது எவ்வித தடையுமின்றி எவ்வித வழி முறையுமின்றி அமைதியடைகிறது. மனிதன் எப்போதுமே நித்தியத்தைத் தேடியிருக்கிறான். ஓவியம் தீட்டு கிறான், அதில் தன் பெயரைப் போடு கிறான், பெயர் நிலைத்திருக்க அது ஒரு விதமான நித்தியத்தன்மை. மனிதன் எப்போதுமே தனக்குப் பின்னால் ஏதோ ஒன்றை விட்டுச் செல்ல விரும்புகிறான். கொடுப்ப தற்கு அவனிடம் என்ன இருக்கிறது, தொழில் நுட்ப அறிவைத் தவிர? அவனுள்ளிருந்து கொடுக்க அவனிடம் என்ன இருக்கிறது? அவன் என்பது என்ன? நீங்களும், நானும், நாம் என்ன, மனோவியலாக? உங்களுக்குப் பெரிய வங்கிக் கணக்கு இருக்கலாம், என்னை விட சாமர்த்தியசாலியாக இருக்கலாம், இதிலோ அதிலோ பெரிதாக இருக்கலாம்; ஆனால் மனோவியலாக என்ன? வெறும் வார்த்தைகள், நினைவுகள், அனுபவங்கள் இவற்றை ஒரு மகனுக்குக் கொடுக்க விரும்புகிறோம். புத்தகத்தில் சேர்க்க விரும்புகிறோம். அல்லது படத்தில்

வண்ணமாக்க விரும்புகிறோம். ''நான்''. ''நான்'' அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகி விடுகிறது. சமூகத்திற்கு எதிரான ''நான்'', ஒன்றுபடுத்திக் கொள்ள விரும்பும் ''நான்'' மனநிறை வடைய விரும்புவது, உயர்ந்த ஒன்றாக ஆக விரும்புவது இப்படிப் பட்டவை எல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்த நான் என்பதை நீங்கள் நோக்கினால் அது வெறும் நினைவு மூட்டை, வெற்று வார்த்தை கள் என்பதைப் பார்ப்பீர்கள். அதைத் தான் நாம் பற்றிக் கொள்கிறோம். அதுதான் 'நீ' 'நான்' என்ற, 'அவர்கள்' 'நாங்கள்' என்ற பிரிவினையின் சாரம். இவை எல்லாவற்றையும் நீங்கள் புரிந்து கொண்டால் அதாவது மற்றவர் மூலமாக அல்லாமல் நீங்களே கூர்ந்து கவனித்து, எவ்வித தீர்மானம், மதிப்பீடு, அழுத்துதல் இல்லாமல் உன்னிப்பாக நோக்கி னால் பிறகு நீங்கள் இறப்பு இருந்தால் தான் அன்பு நிலவக்கூடும் என்பதைப் பார்ப்பீர்கள். அன்பு என்பது நினைவு அல்ல. அன்பு சிற்றின்பம் அல்ல. அன்பு பாலியலோடு தொடர்பு டையது என்று சொல்லப்படுகிறது. மறுபடியும் அதே நிலை, புனிதமற்ற அன்பு என்ற பிரிவினை; ஒன்றை ஏற்றுக் கொள்வது, மற்றொன்றைக் கண்டனம் செய்வது, உண்மையில் அன்பு இவற்றுள் எதையும் சார்ந்த தல்ல. எல்லாவித வேதனை, சச்சரவு, துக்கம் ஆகியவற்றுக்கு இறந்து, கடந்ததற்கு இறந்தாலன்றி ஒருவர் முழுவதுமாக, நிறைவாக அதனிடம் வர முடியாது. பின்னரே அன்பு இருக் கிறது.

# இலட்சியமற்ற, அர்த்தமற்ற வாழ்க்கை

ஜே. கிருஷ்ணமூர்த்தியின் *உள்மனப் புரட்சி* என்ற புத்தகத்திலிருந்து

கேள்வி : எனக்குத் தற்கொலை செய்து கொண்டு விடலாம் போலிருக்கிறது. என்னைப் பொறுத்த வரை, வாழ்க்கையில் ஒரு இலட்சியமும் இல்லை, அர்த்தமும் இல்லை. எங்கு திரும்பினாலும், கலக்கமும், கஷ்டங்களும், வெறுப்பும் தான் தாண்டவமாடு கிறது. இந்தப் பயங்கரமான உலகத்தில் நான் எதற்கு தொடர்ந்து வாழ வேண்டும்?

***கிருஷ்ணமூர்த்தி:*** நாம் ஏன் தற்கொலை செய்து கொள்கிறோம்? பல்வேறு விதமான தற்கொலை வழிகள் இருக்கிறதல்லவா? உங்களை, இந்தியன் என்று தேசத் துடன் இணைத்துக் கொண்டு, அடையாளம் காட்டிக் கொள்ளும் போது, நீங்கள் செய்வது தற்கொலை இல்லையா? ஒரு கட்சியின் உறுப்பினராக, ஒரு பிரிவின் அங்கத் தினராக சேரும்போது, நீங்கள் தற்கொலை தானே செய்து கொள்கிறீர்கள்? உங்கள் நம்பிக்கை யை ஒன்றில் வைக்கும் போது, நீங்கள் தற்கொலை செய்து கொள்ள வில்லையா? அதாவது உங்களை விட உயர்ந்ததாக நீங்கள் கருதும் ஒன்றில், உங்களை அர்ப்பணிக்கி றீர்கள்; உண்மையில், நீங்கள் 'எட்ட நினைக்கும்' சிகரம்தான், நீங்கள் பிரகடனப்படுத்தும் உன்னத மான ஒன்றாக இருக்கிறது. மேன்மையுற விழையும் உங்கள் 'விருப்பம்தான்', உன்னதமானதாக, உங்களால் உருவகிக்கப்படுகிறது. உன்னதமான ஒன்றைச் சார்ந்தவராக உங்களை நீங்கள் அடையாளம் காட்டிக் கொள்ளும் போது அதுவும் ஒரு வகை யான தற்கொலைதான். இப்படிச் சொல்வதைத் தூக்கி எறிந்து விடாதீர்கள், ஐயா தயவுசெய்து கவனியுங்கள்.

உங்களில் பலர் இந்த நாட்டுடன் உங்களை இணைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த நாட்டின் நலனுக்காகப் போராடி இருக்கிறீர்கள். சிறைக்குச் சென்றிருக்கிறீர்கள். சிறிய விஷயத்திற்காக நீங்கள் உங்களை இழக்க வில்லையா? மற்றொருவர் - அவருக்கு எதிலும் நம்பிக்கை இலலை; அவருடைய அறிவுபூர்வ மான வாழ்க்கை, அவரைக் கலக்கத்திற்கும் இன்னல்களுக்கும் தான் கொண்டு சேர்த்தது. ஆகவே, அவர் தற்கொலை செய்து கொள்கிறார். நம்பிக்கை வைத்தவரும் தற்கொலை செய்து கொள்கிறார். நம்பிக்கை இழந்தவரும் தற்கொலை செய்து கொள்கிறார். - இருவரும் அவரவர் வழியில் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், இருவருமே, தங்கள் இருப்பு நிலையிலிருந்து தப்பித்து ஓட நினைக்கிறார்கள். தேசப்பற்று என்று சொல்லிக் கொண்டு தப்பித்து ஓடப் பார்க்கிறார்கள். கடவுள் பக்தி என்று சொல்லிக் கொண்டு ஓடப் பார்க்கிறார்கள். தேசம் எந்த கொள்கைக்காக நின்றதோ, அது தோற்கடிக்கப்படும்போது, தேசத்தில் நம்பிக்கை வைத்தவர் நிலை குலைந்து போகிறார்; கடவுள் பக்தி பலனற்று போகும்போது பக்திமான் பதைபதைத்துப் போகிறார். நானோ அல்லது நீங்களோ நண்பர் ஒருவரிடம், அன்பு கொண்ட ஒருவரிடம், நம்பிக்கை வைத்து, அவரைச் சார்ந்து இருக்கிறோம். அந்த நண்பரின் ஆதரவு, இனிமேல் கிடைக்காது என்ற நிலை வரும் போது, நம்பிக்கை இழந்த நிலையில், வாழ்வின் விளிம்பிற்குச் சென்று, இருளில் வீழ்ந்து மாய, நாம் தயாராகி

# பொறாமையிலிருந்து விடுதலை

பொறாமையிலிருந்து எப்படி விடுபடுவது என்பது பிரச்சனையல்ல; அது மிகவும் சுலபமான விஷயம். அதிகம் தேவை என்ற விதத்தில் சிந்திக்காமல் இருப்பது எப்படி, ஒப்பிடுதல் செய்யாமல் சிந்திப்பது எப்படி, கால அளவைகளின்படி சிந்திக்காமல் எப்படி இருப்பது, 'நான் இப்படி ஆவேன்' என்ற விதத்தில் சிந்திக்காமல் இருப்பது எப்படி என்பதெல்லாம்தான், உண்மையில் பிரச்சனைகளாக உள்ளன. 'அதிகம்' என்ற கணக்கின்படி சிந்திக்காமல், மனம் எப்பொழுதாவது இருக்கிறதா? அது இயலாத காரியம்' என்று சொல்லி விடாதீர்கள். அது உங்களுக்குத் தெரியாத காரியம். உங்களுக்குத் தெரிந்தது எல்லாம் 'அதிகம்' - அதிக விஷய ஞானம், அதிக செல்வாக்கு, அதிக ஆடை அணிகலன்கள், அதிக சொத்து, அதிக அன்பு - எல்லாவற்றிலும் அதிகம் வேண்டும். வேறு சிலவற்றில் குறைவு, மேலும் குறைவு வேண்டுமென்று எண்ணுவீர்கள்.

இவ்வாறு அதிகம் அல்லது குறைவு என்ற அளவின்படி சிந்திக்காமல் இருப்பது மனதிற்கு சாத்தியமாகுமா?

*உள்மனப் புரட்சி* என்ற புத்தகத்திலிருந்து ஒரு அத்தியாயம் ■

விடுகிறோம்.

ஆக, மேன்மை பெற்றவைகளுடன் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதின் மூலமும், நம்பிக்கைகளின் மூலமாகவும், வேறு பல வழிகளிலும், சுய நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ள நாம் முயற்சி செய்கிறோம்; நம் முயற்சிகள் தோல்வியடைந்து, மறுபடியும் நாம் சுயநிலைக்கே தள்ளப்படும்போது, நாம் ஆடிப் போகிறோம். தனிமையில் வாடுகிறோம். நம்பிக்கையிழந்து கலங்கிப் போகிறோம்; தற்கொலைக்குத் தயாராகி விடுகிறோம். இதுதான் நம் நிலைமை, இல்லையா? நீங்கள் விரும்பியவர், உங்களை விட்டு விலகிச் செல்கிறார்; நீங்கள் பொறாமைப்படுகிறீர்கள்; உங்கள் இதயத்தின் வெறுமை வெளிப்படுகிறது; அது உங்களைப் பயமுறுத்துகிறது; அதனால் வேறு வழியில் தப்பித்து ஓடத் தயாராகிறீர்கள் - இது தொடர்ந்து சங்கிலித் தொடராக நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

ஆகவே நம்மை நாம் புரிந்து கொள்ளாதவரை, நாம் இருட்டின் விளிம்பில் தான் எப்பொழுதும் நின்று கொண்டிருப்போம். உலகம், பயங்கரமானது, துக்ககரமானது என்று சொல்கிறோம். ஆனால், உலகம் நாம் எப்படி உருவாக்குகிறோமோ அப்படித் தான் இருக்கிறது; மற்றவர்களுடன் உங்களுக்கிருக்கும் தொடர்பு தான் உலகம். அந்த தொடர்பில், ஆதரவு வேண்டி சார்ந்திருக்கும் நிலை இருக்குமானால், அங்குப் பயம் தோன்றுகிறது, ஏமாற்றம் ஏற்படுகிறது, வெறுப்பு அதிகரிக்கிறது. இவைகளால் தற்கொலை எண்ணம் தலை தூக்குகிறது. அசைக்க முடியாத நம்பிக்கை உங்களுக்கு இருக்குமேயானால், அது உங்களைக் கட்டிப் போட்டுவிடுகிறது. அந்த நம்பிக்கை, உங்கள் முழு மனதையும் நிரப்பி விடுகிறது. அதனால், உள் முகத் தேடுதலில் உங்களுக்கு அக்கறையில்லை; அந்த நம்பிக்கை, நிஜத்திலிருந்து தப்பித்துச் செல்லும் வழியாக உங்களுக்கு அமைந்து விடுகிறது. எவ்வளவுக்கெவ்வளவு மதப்பற்று அதிகமாக உங்களுக்கு இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம், உங்களுக்கு குறைவாக இருக்கும்.

உள்முகமாய் ஆய்வு மேற்கொண்டு, 'ஏன் எப்படி' என்றெல்லாம் வினாக்கள் எழுப்பி, நீங்கள் ஆராயும் போது உங்களின் தன்மையை, வெறுமையைப் பற்றிய உண்மைகளை நேருக்கு நேர் சந்திக்க நேரிடுமோ என்ற பயம் உங்களிடம் இருந்து கொண்டேயிருக்கிறது. எதையும் சார்ந்திராமல், வெறுமையைச் சந்திக்கத் தயாராக வேண்டாமா? எந்த ஆதரவையும் தேடாமல், முற்றிலும் தனித்திருக்கும் நிலையை நீங்கள் அடைந்து, அதைப் புரிந்து கொள்ளவும் வேண்டாமா? தனித்து நிற்பதை, மாசு படாததை, எண்ணங்களைக் கடந்ததைக் கண்டு கொள்ள, நீங்கள் தனித்திருக்க வேண்டாமா? உங்கள் தனிமை உங்களை பயமுறுத்துமேயானால், தனித்திருக்கும் நிலையை உங்களால் அடைய முடியாது. நம் இருப்பைப் பார்ப்பதற்கு, நம்மில் பலருக்கு பயம், அதனால் தப்பிப்பதற்குப் பல வழிகள் வைத்திருக்கிறோம். ஆனால் அவ்வழிகள் பலனளிக்காமல் போகும் போது நாம் வெறுமைக்கே மீண்டும் தள்ளப்படுகிறோம். நம்மை நாமே அறிந்து கொள்வதற்கு, அந்தக் கணத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வெறுமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சடங்குகள் செய்வதின் மூலமோ, விஷய ஞானம் மற்றும் நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்வதின் மூலமோ, கவனத்தை திசை திரும்பும் கேளிக்கைகள் மூலமாகவோ, வெறுமையிலிருந்து தப்பித்து ஓட முயலாமல், அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறுமையைத் திரித்துப் பார்க்காமல், உள்ளவாறு அதைப் புரிந்து கொண்டு அதை மாற்றம் செய்ய நினைக்காமல், மனம், அதில் முழுமையாக ஆழ்ந்திருக்கும் போது மட்டுமே, நீங்கள் அதைப் பார்க்க முடியும். மனம் அவ்வாறு செயல்படுவது மிகவும் கடினம் தான். நம்மில் பலர் சோம்பேறிகள்தாம். உள்ளதை நேருக்கு நேர் சந்திக்க மனவலிமையில்லாமல், தற்கொலை முயற்சியில் இறங்கி விடுகிறோம். அல்லது நம்பிக்கைகளில் மூழ்கி விடுகிறோம். தனித்திருத்தல் என்றால் என்ன என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு, அன்றாட வாழ்வில் எதிர்ப்படும் தனிமையை அனுபவித்துணரும் ஒருவர் தனித்திருக்க, புடம் போடப்பட்ட வராகிறார். தனித்திருத்தல் ஒன்றால் மட்டுமே 'நான்-எனது' என்ற எண்ணங்கள் இல்லாத 'நான்' 'எனது' என்ற எண்ணத்தின் முயற்சிகளும், முரண்பாடுகளும், குழப்பங்களும் இல்லாத, 'இருத்தல்' நிலைப்பாட்டை உணர முடியும்.

*Published in February, June & October.* Periodical

*If undelivered please return to:*
KRISHNAMURTI FOUNDATION INDIA
Vasanta Vihar, 124 Greenways Road
Chennai - 600 028. Tel: 24937803/24937596
E-mail: publications@kfionline.org
Websites: www.kfionline.org / www.jkrishnamurti.org

*Published by G. Rajeev on behalf of the Krishnamurti Foundation India, Vasanta Vihar, 124 Greenways Road, Chennai - 600 028.*
*Printed by N. Subramanian at Sudarsan Graphics Offset Press, 27 Neelakanta Mehta Street, T. Nagar, Chennai – 600 017. Editor: K. Krishnamurthy*